Koviloor Digital Library

சிவமயம்.

சோமசுந்தரேசர், மீனாக்ஷி அம்மன்
செல்லாயி அம்மன்
இவர்கள்மீது
பதிகப் பிரபந்தத் திரயம்.



இவை

கண்டனூர்

நகரத்தார் அவர்களின்

விருப்பத்தின்படி

அகத்தியான்பள்ளி

இராம சேடய்யர் அவர்கள் குமாரனும்


தேத்தாகுடி முதல்தர ஆரம்பப் பாடசாலை

மானேசருமாகிய

வைத்தியநாத சருமாவினால்

இயற்றப்பெற்று





மதுரை:

மீனலோசனி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1923. [அணா 2.

Koviloor Digital Library

Koviloor Digital Library

26/4

உ

சிவமயம்.

சோமசுந்தரேசர், மீனாக்ஷி அம்மன்
செல்லாயி அம்மன்
இவர்கண்மீது

பதிகப் பிரபந்தத் திரயம்.



இவை

கண்டனூர்
நகரத்தார் அவர்களின்
விருப்பத்தின்படி

அகத்தியான்பள்ளி
இராம சேடய்யர் அவர்கள் குமாரனும்
தேத்தாகுடி முதல்தர ஆரம்பப் பாடசாலை
மானேசருமாகிய

வைத்தியநாத சருமாவினால்
இயற்றப்பெற்று





மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1923. [அணா 2.

Koviloor Digital Library

Koviloor Digital Library

24/6

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

இது
பாண்டியன் பத்திராதிபரும், மருங்காபுரி சமஸ்தான
வித்வானுமாகிய
மகா-ள-ள-ஸ்ரீ ஆ. சத்திவேற்பிள்ளை அவர்களால்
இயற்றப்பெற்றது.

இருபத்தேண் சீர்க்கழி னெடிலடி ஆசிரிய விருத்தம்.

திங்கள்வெண் கலைகண்டு கொடிமாட மொளிர்மதிச்
சிலைகான்ற நீரா றினெண்
டிசைசுலாம் பழநவெண் சாலியங் கூழ்வளர்த்
திடுகண்ட னூரி னமர்ந்
தியினறம் புகழ்கல்வி செல்வமிகு நகரவை
சியருள வபீட்ட முற்றுஞ்
சித்திக்க வருள்சோம சுந்தரற் கும்மிடந்
திருவரு டதும்பி வழியு
மங்கல மிகுந்தமதி வதநவங் கயற்கண்
மகேசைக்கு மகிட வசுரன்
மாளவா ளுளைச்சிம்ம வாகன மகிழ்ந்தகௌ
மாரிசெல் லாயி நாமம்
வாய்ந்ததே விக்குநாற் சொல்லணி தெரிந்தாய்ந்து
வளமுறத் தொடுத்த செம்பா
மாலையன் போடுவா ரிதிதாங் கக்காம்
வயங்குற வெடுத்தெ திதளூஉந்
துங்கவெண் டாளமம் புயப்பாச டைக்கணே
தொக்குக் கிடக்க வதனைத்
தூயவெண் குருகுகண் டீன்றதன் முட்டையென்
றுற்றடை கிடக்கும் வாவி

Koviloor Digital Library

துன்றெழிற் பண்ணைசூழ் துறுமகத் தியான்பள்ளி
நோயில்வாழ் வுறும் மெழிற்பூ
சான்றாம சேடன்செய் தவமுருக் கொண்டன்ன
சுதன்மிகுஞ் சுகுண சீலன்
தங்கும் தமிழ்ப்புலவ னதிமதுர கவிபுலவர்
தலையசைத் திடச்சொ னிபுணன்
சற்சனப் பிரியனுயர் தருமமன் புடன்செயுந்
தாட்டிகன் பலர்வி யக்கத்
தருக்கதரப் பிரசங்க னுயர்தேவ தாருடீ
தனிற்கலா சாலை முறையிற்
ருபித்தி லக்குற நடாத்துவைத் தியநாத
சருமா வணிந்த னனரோ.

இது

கோயிற்பட்டித் தாலூகா பாண்டவர்மங்கலம்

பிரம்மஸ்ரீ சங்கரநாராயண பாரதி அவர்களால்

இயற்றப்பெற்றது.

பதினான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருவுலவு கண்டளா ரலகில்புகழ் கொண்டுவளர்
திங்களணி சுந்த ரேசன்
சேற்கண்ணி செல்லாயி மூவர்க்கு மன்பொடுந்
திசையுளோ ரேத்தல் செய்ய
மருவரிக ளுண்டமல ருலருமிலை தென்றெண்ணி
வாடாத சொற்பொருண் மலர்
மணிபத்தி நாரினிடை யணிவைத்து வேய்ந்ததொடை
மன்பதிக மார்பேற் றினன்
ஒருவில்புவி முடிகொண்டு பாவுரகன் வாய்த்தென்று
மோதிடுங் கலைக ளாய்ந்தே
பொருமூன்று தமிழோடு மறமூன்று நூல்களு
முணர்ந்துளா னுலகர் போற்றும்

Koviloor Digital Library

பருவமத னெழிறுன்று மதியதனி லுயர்புந்தி
பண்ணைசூழ் தரும கத்யான்
பள்ளிவளர் சதுர்வேத வல்லன்வைத் தியநாத
பாவலன் புகழ்வ லோனே.

இவை
கண்டனூர் மகா-ா-ா-ஸ்ரீ
மூ. ராம. சோமசுந்தரஞ்செட்டியார் அவர்களால்
அவர்களால் இயற்றப்பெற்றவை.

நேரிசை வெண்பா.

மின்னார்ந்த கண்டனூர் மேவுசுந்த ரேசர்க்கு
மன்னுமீ னாட்சிமண வாட்டிக்கும்—வின்னுதலாள்
செல்லாயி யம்மைக்குஞ் சேர்பதிக மூன்றுதந்தான்
கல்லாருங் கண்டுவக்கக் காண்.

தேத்தா குடியிற் சிறந்தகல்விச் சாலைவைத்துக்
காத்தாள் புலவன் கலம்பகச்செம்—பாத்தாக
கத்தியான் பள்ளிக் கடவுடிருத் தாட்கணிந்த
வைத்திய நாதசரு மா.

இவை
கண்டனூர் வித்தியாசாலைத் தலைமைப் போதகாசிரியராகிய
ஆலங்காடு மகா-ா-ா-ஸ்ரீ
வை. செல்லையாசெட்டியார் அவர்களால்
இயற்றப்பெற்றவை.

அறுசீர்க்கழி னெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருவேறி யுறைமாட நிறைவீதி தொறுமாதர்
சிந்தும் பொற்பூண்
டருவேறு முலகமெனத் தாமேறு மொளிகாலத்
தழைக்குஞ் செல்வம்
பெருகாறு மெனுங்கண்ட னூரமர்சொக் கேசரிடம்
பிரியா தென்று

Koviloor Digital Library

முருவேறி யுறைமீனும் பிகையுடன்செல் லாயியென
வுரைக்கு மூவர், (1)

சிந்தைமகிழ் தாக்கருணை திளைப்பவொரு முப்பதிகஞ்
செய்தா னந்த
முந்தமருங் கருணைபெறிஇ யுயர்வடைந்தா னெளிர்தேத்தா
குடியி னுளும்
வந்தமகிழ் வுடனறஞ்சான் மனையறமே புரிந்தமர்வோன்
மாகி லாத
வந்தமிலா வருமறைபோ னிராமசே டையன்முன
மளவி லாமல், (2)

ஆற்றியநற் றவமுருவா யடுத்ததெனுந் தகையனிறை
யறிவ னுன்ற
தோற்றமுடை யான்புலவ ருளங்கனியக் கவிபாடுந்
தூய்மை சான்ற
வேற்றமுடை யான்கல்விக் கெல்லையா யவற்றினிய
வினிதி னோர்ந்தோன்
மாற்றரிய பெரும்புகழான் வைத்தியநா தச்சருமா
மணிபன் மாதோ. (3)

இது கண்டனூர் மகா-ா-ா-ஸ்ரீ
தெ. அரு. சித். இராமநாதன் செட்டியார் அவர்களால்
இயற்றப்பெற்றது.

எண்சீரடி ஆசிரிய விருத்தம்.

திருமகளுங் கலைமகளுஞ் சேர்ந்து வாழுஞ்
சிறப்புடைய கண்டனூர் தன்னைக் காக்கும்
அருமைமிகு சுந்தரர்க்கு மீனாட் சிக்கு
மான்றசெல்வ நாயகிக்கு மொவ்வொன் றாகப்
பெருமைமிகு பதிகமொரு மூன்று தந்தான்
பிரியமொடு கல்லூரி நடாத்து கின்ற
தெருளுடையா னூர்தேத்தா குடியாக் கொண்ட
சிறந்தவைத் தியநாதச் செம்ம லூனே.

Koviloor Digital Library

சிவமயம்.

சோமசுந்தரேசர் பதிகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

திருக்கண்ட ஹூர்வாழுந் தேவிமீ ஞட்சியுட
னுருக்கண்ட வீச னொருசீர்ப்—பெருக்கண்ட
நாடும் பதிகமிவை நன்குறவி நாயகநீ
பாடுங் கருணையளிப் பாய்.

நூல்.

திங்களணி யும்பரம சிவமே சத்தி
திகழ்வாம பாகமுறுந் தேவே தூநீர்க்
கங்கைமகி ழுச்சிரமேற் கண்ட கோவே
கருதியவெல் லாமருளுங் கருணைக் குன்றே
சங்கர சதாசிவவெந் தவமே ஞான
தற்பர தயாநிதியாய்த் தங்குஞ் சோதி
துங்கமுறுங் கண்டனூர் துலங்குஞ் சோம
சுந்தரனே யுன்பதமே தொழப்பெற் றேனே. (௧)

அகிலபுவ னங்களெல்லா மானுய் நீயே
யரியயனே டமரரென வமர்ந்தாய் நீயே
மகிதலமார் தலமெதிலும் வதிந்தாய் நீயே
மாதேவ னென்றபெயர் வகித்தாய் நீயே
வகிர்மறையெ லாந்துதிக்க வாழ்வாய் நீயே
வருமூழி நாடோறும் வளர்வாய் நீயே
சுகிர்தமுறுங் கண்டனூர் துலங்குஞ் சோம
சுந்தரனே யுன்பதமே தொழப்பெற் றேனே. (௨)

தற்பரமே சற்குருவே தரும வாழ்வே
தனிப்பொருளே தங்கருளே தருகை நீண்ட

Koviloor Digital Library

கற்பகமே கதிரொளியே கதிய ளிக்குங்
கதியேநற் களிப்பருளுங் களிப்பே காணு
மற்புதமே யருமணியே யமுதே யென்ற
னன்பேயவ் வன்பினுளே யமரும் பேறே
சொற்பொருடேர் கண்டனூர் துலங்குஞ் சோம
சுந்தரனே யுன்பதமே தொழப்பெற் றேனே. (௩)

கனியேயக் கனியமுதே கனியின் றேனே
கரும்பேயக் கரும்புறுசர்க் கரையே கண்டே
தனியேயத் தனிமுதலே சான்றோர் கொண்ட
தவமேயத் தவக்கொழுந்தே தவத்தின் பேறே
பனியேயப் பனிமலைசேர் பாவை பாகா
பசுவேயப் பசுபதியே பண்பே சங்கத்
தொனியேசேர் கண்டனூர் துலங்குஞ் சோம
சுந்தரனே யுன்பதமே தொழப்பெற் றேனே. (௪)

அத்தனே யமலனே யானே முக்க
ணையனே யரவணியு மமரர் கோவே
பித்தனே பிறைசூடும் பிஞ்ஞ காவெம்
பெருமானே பிரபுவே பேயோ டாடு
நித்தனே நிமலனே நிதியே யென்ற
னினைவுனையே நினைக்குமரு ணெறியி வாயே
சுத்தனே கண்டனூர் துலங்குஞ் சோம
சுந்தரனே யுன்பதமே தொழப்பெற் றேனே. (௫)

ஆண்டவனே யமரர்குல வரசே தில்லை
யம்பலத்தி னம்பிகைமு னருட்கூத் தாடுந்
தாண்டவனே தலையோடு தரித்த கையா
சிரமெலாஞ் சருப்பங்க டம்மைப் பூணப்
பூண்டவனே புலித்தோலைப் புனைந்த மெய்யா
புகலுனது புகழ்களையெப் போதும் பேசத்
தூண்டவனே கண்டனூர் துலங்குஞ் சோம
சுந்தரனே யுன்பதமே தொழப்பெற் றேனே. (௬)

Koviloor Digital Library

அண்டர்புக ழையவுனக் கடிமை பூண்டுன்
னடிக்கமல மணுகியுறு மன்பர் நீல
கண்டர்முதற் றொண்டர்பலர் காண்ப ரன்னோர்
கருத்தென்போற் காணவெளி கண்டா யுன்றன்
றண்டருமத் தயாவளிக்குச் சமமற் றுண்டோ
தானேயாய்த் தண்ணளியாய்த் தம்பி ரானுய்த்
தொண்டருறுங் கண்டனூர் தலங்குஞ் சோம
சுந்தரனே யுன்பதமே தொழப்பெற் றேனே. (எ)

தக்கலிங்கா கிருதியினைத் தானே காணத்
தங்குறுமோ ரிங்கிதமே தனியேன் சிந்தைச்
சிக்கலிங்கா மெய்வெவையுஞ் சோரா தின்சீர்ச்
செந்தமிழா லனுதினமுந் திகழ வோதிப்
பக்கலிங்கா முனைநாளும் பாடிப் பாடிப்
பாவவரு ளுவைமதுரா பதியில் வாழுஞ்
சொக்கலிங்கா கண்டனூர் தலங்குஞ் சோம
சுந்தரனே யுன்பதமே தொழப்பெற் றேனே. (அ)

சந்ததமுஞ் சிந்தனையுன் றனைநி னைக்கச்
சதாவுனது பணிவிடையே சடலந் தாங்க
வந்தனமார் துதிபலவும் வாக்கு ரைக்க
மருவுமுன தரும்பத்தி மார்க்க மேகொண்
டுந்தனையே சிவசிவவென் றோதி யான்கொண்
டுறுவினைதீர்ந் தின்புறவே யுதவு வாய்நீ
சொந்தமுறுங் கண்டனூர் தலங்குஞ் சோம
சுந்தரனே யுன்பதமே தொழப்பெற் றேனே. (கூ)

அன்பர்மனத் தன்புமிகு மருளே போற்றி
யாரணத்தி னரும்பொருளா மாசே போற்றி
யென்பரவ மாமையணி யிறையே போற்றி
யேகாந்த மாயுறையு மியலே போற்றி
மன்பரவு வசியர்குல மணியே போற்றி
வணிகர்பணி யுறுகோயில் வனனே போற்றித்
தின்பனுகாக் கண்டனூர் தலங்குஞ் சோம
சுந்தரனே யுன்பதமே தொழப்பெற் றேனே. (கo)

சோமசுந்தரேசர் பதிகம்
முற்றுப்பெற்றது.

Koviloor Digital Library

உ

சிவமயம்.

மீனாக்ஷியம்மன் பதிகம்.

——:o:——

காப்பு.

நேரிசைவெண்பா.

தேனாட்சி கொண்டபொழில் சேர்கண்ட னூர்வாழு
மீனாக்ஷி கொண்டபுகழ் மேதினியிற்—றானாட்சி
கொள்ளவுரைக் கும்பதிகங் கூறவொரு கொம்புடைய
வள்ளலிரு ளெண்ணவரு மால்.

நூல்.

திருமகளு மவடனது மருமகளு மிருகவரி
திகழவிரு புறமும் விசிறத்
திதிவிதிக ளதிபதிகண் மதிதுதிக ளோதுமுனது
திருவடிக ளூறவ ணங்க
வருமகவி லறுமுகனு மறுமுகனு மடியிலுற
வடியவரு மடியி லுறவே
யாஹர சிவாயநம திரிபுரசம் மாரவெனு
மருமொழியு னணிசெ வியுற
வொருமகிழுன் னதுபுகழ்க டருமதுர விசைநடன்
மும்பர்கொ ளரம்பை யர்செய
வுவகையொடு செயவிசய வுரைகடர வமரர்குழு
வுறுமிய மொலிக்க விதித்
தெருமகா துவசமுற வொருபவனி வருமெமது
தேவியரு டரவ ருவையே
சேர்கண்ட பார்கொண்ட வேர்கண்ட னூர்கொண்ட
தேவிமீ னாட்சி யுமையே. (க)

தக்கன்மக ளரம்பெயர்வி டுக்கவிம வான்மக
டரிக்குமு னெரிக்க மதனைச்
சனகாதி முனிவோர்கண் மனதார்ம வுனயோகு
தருஞான குருதானுறச்

Koviloor Digital Library

சக்கரன்மு தற்சுரரி டுக்கறவி றற்குமர
சரவணப வகுரு வருக
தமிழ்முநிவ னெமதுதிசை தமையனுக மகிழ்மேலை
தானுமிம வானு மகிழ
வக்கமொடு பூதிபஞ் சக்கரவ ரரசிவா
வதிபபார் வதிச மேதா
வன்பவென வன்பர் துதி யின்புறம ளங்கரி
வளம்பெறம ணம்ப ரமனைத்
திக்கயலெ லாமுயர்த ரக்கிரியி லேமுனந்
திகழுப்பு ரிந்த குமரி
சீர்கண்ட பார்கொண்ட வேர்கண்ட னூர்கொண்ட
தேவிமீ னாட்சி யுமையே. (உ)

பழுதின்மல யத்துவச வழுதிமக ளெனவந்து
பலகலை பயின்று கன்னிப்
பருவமதி லங்குரிமை தருமுடிபு னைந்தரசு
பாண்டிநக ரண்டு செங்கோ
லழகுற நடாத்தியுல கெழுதுபுக ழாற்றிசை
யனைத்தையு மடக்கி விசய
மட்டதிக் குகளுஞ்செய் திட்டுநந் திகணங்க
ளார்முனைப் போர்க லக்கி
முழுதுலக சயமதுறு பொழுதுசிவ பரனெதிர
முலையதொன் றிலையென் றுற
முக்கணற் கேமாலை யக்கணத் தேயேற
மூட்டிமுடி சூட்டி யுந்தன்
செழுமைபுறு மாசுரிமை முழுதமுற வுரிமையொடு
செய்துபுக ழெய்து மனையே
சீர்கண்ட பார்கொண்ட வேர்கண்ட னூர்கொண்ட
தேவிமீ னாட்சி யுமையே. (௩)

வேலைமிகு கருவமுறு வேலையட லுறுதனது
வேல்விட்ட தால டக்கி
விண்ணடைந் திந்திரனை யண்ணியவ னுவிட்ட
விற்கனக வற்பு தமணி

Koviloor Digital Library

மாலையது பெற்றமுயர் நீலமுகி லைத்தனையுள்
வாவிட்டு மரிபெற் றுறு
மாமுடியெ றிந்தும்வளை தானுறவ தன்பினவன்
வளமுறத் தளைய விழ்த்தஞ்
சோலைசெறி யூரின்மழை காலவன மாரதிக
சுந்தரம டைந்தி லகநற்
சுகமுறத் தந்துபின் னகமதைச் சென்டுகொடு
தொட்டுநிதி பெற்ற சுதனைச்
சேலைநிகர் கண்ணியருள் செய்துமெட் டெட்டாடல்
செய்துமகிழ் வெய்து பரையே
சீர்கண்ட பார்கொண்ட வேர்கண்ட னூர்கொண்ட
தேவிமீ னாட்சி யுமையே. (௬)

சிருட்டிதிதி சங்கார ருட்டிறம தார்தொழிற்
சேருமதி கார சத்தி
திகழொளி விளங்குவா னகவிரவி திங்களுட்
செய்தொழில தெய்து சத்தி
யருட்டிறமு முஞ்சுரர் பொருட்டசுர சங்கார
மாகவெளி யாகு சத்தி
யறுமுகனை யருள்சத்தி யுறுமுலகு தருசத்தி
யைந்தெழுத் தான சத்தி
மருட்டிறம றத்தமிழ்நி ரட்டுமொழி யிற்புகழ்
வழுத்தருள் பழுத்த சத்தி
மாசத்தி ஞானப்ப ராசத்தி யானந்த
மருவுமுரு மருவு சத்தி
தெருட்டிகழ வெங்கட் கருட்டிற மெலாமருள்
சிற்சத்தி பொற்சத் திரீ
சீர்கண்ட பார்கொண்ட வேர்கண்ட னூர்கொண்ட
தேவிமீ னாட்சி யுமையே. (௭)

நாடுலக நாடுகளி னுடுபுகழ் நாடுதமிழ்
நாடுமுயர் நாடு வழுதி
நாடதனு ளேவணிகர் நாடுநக ராறுபதி

Koviloor Digital Library

ஞறுதொகை யான நகர்க
ணீடுதிரு தேடுபுகழ் நாடுமறை நீதிமிக
நிற்குமவை யுட்கலைபெறு
நீணகர மாணறிவு காணுமதி வாணரொடு
நித்தநெறி னினைக்கு மதியர்
பாடுகவி வாணர்விளை யாடுநகர் வீசவனர்
பதியருகு நிதிய ளகையம்
பதியனுகு பதிவணிக பதிகணிதி பதிகளமர்
பதியமரர் பதியெ னவுமோர்
தேடுபொரு ணீடுபெயர் கூடுமரு ளுடனது
திருவிழியி னருள்பொ ழியவாழ்
சீர்கண்ட பார்கொண்ட வேர்கண்ட னூர்கொண்ட
தேவிமீ னாட்சி யுமையே. (௬)

மாசற்ற ஞானப்ர காசக்க லாரத்ந
மயமாகி யயனு விலே
வாழ்வுற் றுலாவுற்ற மாதுக்கு மால்கொற்ற,
மார்பிற்கு ளேர்பெற் றுறும்
வாசத்தை நேசித்த மாதுக்கு மேலுற்ற
மாதுநீ யாத லாலென்
வாயிற்க லாசத்தி நேயப்ர காசத்தை
வைக்கவர லுற்ற கவிக
ளீசற்கி டப்பாக மார்சுத்தி கிற்காக
வென்றுமில குந்த ரமதா
யிருக்கவு மிகப்பொரு ளிலக்குமி வரற்கருள
வெப்பொழுது மற்புத முறத்
தேசப்ர காசக்ரு பாசத்தி யெற்கிதைச்
செய்யவருள் செய்யு மமுதே
சீர்கண்ட பார்கொண்ட வேர்கண்ட னூர்கொண்ட
தேவிமீ னாட்சி யுமையே. (௭)

மானந்தி யிடவலந் தானின்று தாளமொடு
மத்தள முழக்க பூத

Koviloor Digital Library

வகைகடன் னுமைமொக்ரு தருதிதிந் திமிதிந்தி
மங்களமு ழக்கி யார்ப்பக்
கானந்த ரும்பண்க ளானந்த முண்டின்பு
கதுவதும் புருஈ ரதர்
கழறவைந் துந்துபிகள் கல்கலென் ருர்கலி
கலிக்கமுள ரிக்க லமக
ளானந்த சுருதிர வேதன்ப ணிசைசாம
மதுபாழ்ந டவியோ தவின்
ணமரர்மலர் மழைபொழிய டமாமழு வுழையொளிர
வடிமுயலன் முதுகி லுறவே
தீனந்தெ றம்பரம னுவந்த நடநின்று
தினமுமகிழ் சிவகா மிபே
சீர்கண்ட பார்கொண்ட வேர்கண்ட னூர்கொண்ட
தேவிமீ னாட்சி யுமையே. (அ)

வெயிலினொடு பனிமழைபி லயர்வுதா விலதுதவ
மிகுநிலையி லகநி லயுறம்
விசயனது பரிவுநில யிசைநலம நறவருளும்
விடமெயின ரதுவ டிவுறப்
பயிலரனொ டனுகியொரு வெறழியதை யவனருகு
படாவிட விடாதுசெயப்
பகருமது பொழுதானொ டிகலவனு மிருபகழி
பதியவிரு புறமும் விடவக்
கபனரியு மறிவரிய வானும்விச யனுடனம
ரதிகமூா னொடுபு ரியவில்
லதுகொடடி யுதவவவ னதைபுமுடி கொடுமுரணி
யவனிவினி லுழல விடுமச்
செபலதுறு பொழுதிலவ னிபலழகு முதுகினொரு
திறமறிய னுறும மலையே
சீர்கண்ட பார்கொண்ட வேர்கண்ட னூர்கொண்ட
தேவி மீனாட்சி யுமையே. (கூ)

பங்கயற் கண்ணரிய சக்காற் கண்ணிடது
பங்கிலுறை மங்கை போற்றி

Koviloor Digital Library

பத்திமிகு சுத்தர்மன நத்தியவர் சித்தமது
பற்றியருள் சத்தி போற்றி
யிங்கயற் கண்ணுலக மெங்குமெவை யும்படைத்
தெம்மையா ளம்மை போற்றி
யின்பரு டரும்பவெளி யன்புருவி ளங்கவரு
மெங்கருணை நங்கை போற்றி
யங்கயற் கண்ணியுன ருங்குழல்வ ணம்போற்றி
யார்தொடித் தோள்கள் போற்றி
யழகுறுதல் விற்போற்றி யெழிலுதவு நகைபோற்றி
யடிபோற்றி முடிபோற் றியுன்
செங்கருணை விழிபோற்றி யென்றுபதி கந்தனைச்
செப்புமடி யார்க்க ருள்வையே
சீர்கண்ட பார்கொண்ட வேர்கண்ட ளூர்கொண்ட
தேவிமீ னாட்சி யுமையே. (௧0)



Koviloor Digital Library

உ

சிவமயம்.

செல்லாயி அம்மன் பதிகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

செல்வமிகுங் கண்டனூர்த் தேவிசெல் லாயிமுன்
மெல்லவருஞ் சொல்லியென்று மேத்துறவே—சொல்லுரு
நற்பதிக மொன்றியம்ப நால்வாயோ ரைந்துகரக்
கற்பகக்க ணேசனடி காப்பு.

நூல்.

கார்கொண்ட பொழில்கள்வின் ஞர்கொண்ட பொழிலெழிற்
காட்சியுறி மாட்சி பெறவுங்
கண்கொண்டு தெரிவரிய பண்கொண்ட பணிக்ளுறு
கடவுளர்க ளுறையு மிடமும்
வார்கொண்ட முரசதிரு மேர்கொண்ட மறுகுகளு
மணிமாட மணிகோ புர
வாயிலுறு வீடுகளு மாயிருவி மூவமர்செய்
பக்னர்தெரு வின்ன யமது
நீர்கொண்ட பானடியர் தேர்கொண்ட கலைஞர்மறை
நெறிகொண்ட பெரிய ரெவரு
நிகழ்கின்ற விடமுமுயர் புகழ்கின்ற வளரிடமு
நிரைநிரையு றப்ப லமணித்
தேர்கொண்ட புறமுமுற் றேர்கொண்டு வாழுஞ்சி
றப்புறஞ் செல்வ மொளிருந்
திருக்கண்ட னகர்மீ தருக்கொண்டு புகழ்மேவு
தேவிசெல் லாயி யருளே. (க)

மங்களமு முங்குறுமி யங்களொலி பொங்கமுது
மறையவர்கண் மறைவ ழங்க
மகாதோ ரணமிஞ்சு சிகாபூ ரணகும்ப
வரிசைபெற முரசு மதிரத்

Koviloor Digital Library

திங்களொளி போல்விளக் கங்கள்பல காணவொளி
நிறைமனை மகிழ வாணச்
சிறப்புமத் தாப்புக ளுறப்பலவி தாற்புதஞ்
சேரவெளி நேர தாகக்
கங்கணி கலாவல்லி கௌரிபக வதிமாரி
காளிகங் காளி சூலி
காத்தியா யனியென்று மேத்தியே துதிமிகக்
கண்டுகளி கொண்டு செய்யச்
சிங்கவா கனமேறி யெங்கண்மீ தன்புறத்
தெருவுலா வருநா யகி
திருக்கண்ட னகர்மீ தருக்கொண்டு புகழ்மேவு
தேவிசெல் லாயி யருளே. (உ)

சுந்தரிச வுந்தரிது ரந்தரிபு ரந்தரி
சுதந்தரி நிரந்த ரியரி
சோதரிச டாதரிநி ராதரிபு ராதரி
சுராதரி கதாத ரிபரை
யந்தரிவ ராகியுமை விந்தையபி ராமிகலை
யானந்தி யம்பு ணத்தி
யரியேறி யமலைசங் கரிபாலை விமலைசிவை
யமரியுபர் சமரி குமரி
கந்தரிக பாலிமுக் கண்ணிகார்த் திகைநீலி
காத்தியா யனிநா ரணி
காளிகலை யூர்தியெண் டோளிகௌ மாரிசக்
கரபாணி கமலை யெனவுஞ்
செந்திரிச னங்கண்டு வந்துபணி யன்பரைச்
செம்மையுற வருளு மம்மா
திருக்கண்ட னகர்மீ தருக்கொண்டு புகழ்மேவு
தேவிசெல் லாயி யருளே. (ஙு)

முத்தேவ ரொளிகண்மற் றெத்தேவ ரொளிகள்வெளி
மொய்த்தழகு பெற்ற வடிவாய்
முகமாதி யங்கங்கள் வகையாயி லங்கவம்
மூர்த்திகளு நேர்த்தி பெறவே

Koviloor Digital Library

கைத்தேசு றப்பலவி தத்தேசு பெற்றுபர்வு
காண்படைகன் மாண்பு கழுறக்
கருதியவ் வவர்கடா வருதியென் றகமகிழ்வு
கண்டுபல கொண்ட கைக
ளெத்தேவ ருந்தொழப் பெற்றோரு ருச்சுமந்
திமவான ளித்த சிம்ம
மேறியகி டன்றனைக் கீறியவன் மார்பிலு
வெழிற்பதமி திக்க வொருநற்
சித்தேவ ருங்காணு றத்தேசு கொளுமெனது
சித்தமர் சத்தி வடிவே
திருக்கண்ட னகர்மீ துருக்கொண்டு புகழ்மேவு
தேவிசெல் லாயி யருளே. (௪)

மணிகளொன் பதுமிழைத் தனிகொளுங் கனகநிறை
மகுடவொளி திகழு மழகும்
மதிநுதலி னழகுமத னிரதிவினி கரிருபுரு
வத்தழகு மொத்த கருணைக்
கணினழகு மொளிர்குழைக ளணிசெவிக ளழகுமதி
கவர்வயிர மவிர ணிபெறக்
காணுறுங் குமிழழகு மாணுறும் பவளவிதழ்
கண்டுநகை கொண்டு முரையா
ரணிவாயி னழகுமொளிர் மணியார மிளிர்குயத்
தழகுமெண் டோளி னழகு
மருக்கலை யிலங்குறு மருங்கினழ கும்பக்த
ரன்புக டதும்பு மழகுந்
திணிபெறுச தங்கைகிண் கிணிபுறுப தாம்புயஞ்
சோழந்து நேர நாளுந்
திருக்கண்ட னகர்மீ துருக்கொண்டு புகழ்மேவு
தேவிசெல் லாயி யருளே. (௫)

உலகிலுயர் வாகவுறு மலகில்புக ழேறுகட
வுளரினியல் வளம வைபெலா
முன்சத்தி யேயெனவ தன்சித்தி தானென
வுணர்த்துவதை யொத்த வழகா

Koviloor Digital Library

26-4

இலகுநவ ராத்திரியி லுலகுமகிழ் தோத்திர
மியற்றுற நயத்த வுருவ
மிலக்குமியை நேரவு மலேக்குமரி போலவு
மெழிற்கலே மகட்கு நிகரு
மலகிலுரு சத்திவடி வலதரிய யன்பாம
ருகுமுரு வாகியு மிருந்
தழகுறக் காட்சியருள் விழவுறக் காண்கருணே
யம்மைமற் றிம்மை தெய்வத்
திலகமென வுறுபெடீமது குலமிலக வருளுதவு
திருமருவு மொருவு ருவமே
திருக்கண்ட னகர்மீ துருக்கொண்டு புகழ்மேவு
தேவிசெல் லாயி யருளே. (சு)

அண்டர்துயர் கொண்டவது கண்டுமொளி யுண்டவுரு
வாகிவெளி யாகி மிக்க
வட்டகா சங்கள்செய் திட்டமகி டாசுர
னழிந்திட வொழித்த தன்பின்
சண்டமுண் டாளோடு கண்டுறுமி ரத்தபீ
சன்றனையு மன்று கொன்று
தன்பலவ கம்பாவு சும்பனுநி சும்பனுந்
தரையொழிய விரைவி லாற்றி
மண்டலந் தனிலழகு கொண்டவுன தழகுவடி
வந்தனையொர் வந்தனை செய
மாரிமக மாயிசக விரியுல காபிபரை
மாகாளி சூலி நீலி
திண்டிறல்கொள் சண்டிசா முண்டியெனு நாமங்க
டிகழவுல கெவனு மொளிருந்
திருக்கண்ட னகர்மீ துருக்கொண்டு புகழ்மேவு
தேவிசெல் லாயி யருளே. (எ)

அம்மையே யுனதடிக டம்மையே யெனதுசிர
மணியவுன தணிக ளாரு
மவயவங் களேயெனது தவமுறுங் கண்கள்கண
டானந்த மேயுண் டுற

Koviloor Digital Library

விம்மைமறு மைப்பயனி னன்மையது றச்செய்யு
வினைசகலையெ னிருசெ விகொள
வெப்பொழுது முன்சீர்கள் செப்புமுறை யென்னு
வியம்பவுத யம்பெற வரு
ளெம்மையுன் விளையாட றம்மையென கங்கொள
விலங்குனத ரும்ப ணிகளை
யென்கா மியற்றமற் றென்பொருளு னன்பர்மன
மின்புறவி தம்பு கவுமிச்
செம்மைவழி யென்றுமென் னம்மையெனை யண்டவுன்
றிருவருளை யருளு மம்மா
திருக்கண்ட னகர்மீ தருக்கொண்டு புகழ்மேவு
தேவிசெல் லாயி யருளே. (அ)

பூவிற்பி றந்தயான் மேவிச்சி றந்ததோர்
புண்ணியம் பண்ணி யறியேன்
புகலுவது புகழ்பெசு வகையுமறி யேன்சிறிது
புந்தியினி னைந்து மறியேன்
பாவிற்சி றந்தபண் பாடிப்ப ணிந்துமுன்
பதமணியும் விதமு மறியேன்
பத்தியென் றேசொற்ப தத்துரையெ தோவெனும்
பண்பதுநி ரம்ப வறியேன்
நாவிற்சி சைந்தபடி பாவைப்பு கன்றுனது
நளினமல ரடிக ளேற
நன்றவைத் தேவிநிற் றுன்றுன் குணங்களை
நயந்துல குயுந்தி றமதைத்
தேவிற்சி றந்திலகு தேவியருள் செய்வையென்
சித்தமிசை யுற்ற சத்தி
திருக்கண்ட னகர்மீ தருக்கொண்டு புகழ்மேவு
தேவிசெல் லாயி யருளே. (கூ)

ஆதிமறை வாழிமறை நீதியுரை வாழிகலை
யாகமபு ராணம் வாழி
ஆழியுல கறம்வாழி குழுமுன தருள் வாழி
யாறுமதம் வாழி காலு

Koviloor Digital Library

சாதிமிக வாழிநூ லோதறிஞர் வாழிமா
　　தவர்கள்யோ கியர்கள் வாழி
　தங்குகற் பினிலுபரு மங்கையர்கள் வாழிமுத்
　　தமிழுரைக ளமுதம் வாழி
நீதிகொளு லையஞ் சோதிமிக வாழிநீ
　　நிலையுற்ற நலம்வா ழியந்
　நீணகர முறைபவர்கள் மாணலம துறவுனடி
　　நேயமற வாது வாழி
தீதிலா விப்பதிக மோதவோர் வாழியுன்
　　சீர்வாழி பேர்வாழ் கவே
　திருக்கண்ட னகர்மீ துருக்கொண்டு புகழ்மேவு
　　தேவிசெல் வாயி யருளே. (கம)

செல்லாயி அம்மன் பதிகம்

முற்றுப்பெற்றது.



Koviloor Digital Library

உ

சிவமயம்.

முருகன் றுதி.

திருப்புகழ் மெட்டு.

சந்தக்குறிப்பு:

தந்த தானன தனதன தனதன
தந்த தானன தனதன தனதன
தந்த தானன தனதன தனதன — தனதானா

சந்த மான மெனவரு நடையின
ருண்டி லாதறி தலரிய விடையினர்
தங்க மேருச ருகைபெறு முடையினர் — மதநூலின்

தன்மை யாவையு முணர்தரு மொழியின
ரம்பு போலெதி ருறுமிரு விழியினர்
சம்ப்ர தாயம தனுபவ வழியின — ரதிமோகந்

தந்த மாதர்க டருமயல் வலையினி
லெந்த நோமு மலைதரு மதிகொடு
தங்கி வாழுற விலதன தடியிணை — மறவாத

சந்த மேபெற வருணகி ரியுதவ
நின்ற தோர்புக ழுறுகின முறைசெய
தங்கு லாவரு டாசர வணபவ — குகவேளே

விந்த மாமலை யதுபெறு கருவம
டக்க வேமுன மருளிய குறுமுனி
விந்தை யார்தமி ழுணருற வுதவிய — குருநாதா

மிஞ்சு மாய்கைக ளுறவில கிபகிர
வுஞ்ச மாமலை பிளவுற வுமசுரர்
வெந்து வோற மடிபவு மயில்கொளு — முருகோனே

கந்த மாதன கிரிமுத லுலகுறு
குன்று தோறுமி கமகிழ்வொ டுலவுதல்
கண்டு மாடலை யனிவரு முணருற — வருள்வோனே

Koviloor Digital Library

கங்கை யார்சடை யவனுத வுகுமா
சங்க மார்கர வரியிடெரு ருமருக
கண்ட னூர்தனி லுறைதரு மெமதொரு பெருமாளே.

சந்தக்குழிப்பு.

தனதந்த தான தனதந்த தான
தனதந்த தான தனதான

மணிகொண்ட சோதி யணிகண்டு மாடை
வகைகண்டு மாதர் மயலாலே
மருளுண்டு மாா னிருணின்று லாவு
மதிகொண்டி யானு முறவாடி
பணிகொண்ட ஞேர்கள் பிணிகொண்டி டாத
படியெந்த நாளு முனையேசொற்
பதமுண்ட மாலை சதகங்கள் கோவை
பதிகங்கள் பாட வருள்வாயே
அணிகொண்ட நீல மணிகண்ட ஞதி
யருமந்த்ர மூல வுபதேசா
அசலங்க டோறு மிசைநுன்று மாட
லதுகொண்டு லாவு மொருவேலா
திணிகொண்ட சூர னுயிர்கொன்று தேவர்
சிறைவிண்டு காவல் புரிவோனே
திருநின்று வாழு மொருகண்ட னூரு
டிகழ்கந்த சாமி முருகோனே.

சந்தக்குழிப்பு.

தான தத்தன தான தத்தன
தான தத்தன தான தத்தன
தான தத்தன தான தத்தன தனதான

மாத லத்தினி லேயு தித்துமெ
ஞளு மித்தைய தாக வுற்றவிவ்
வாழ்வி னைப்பெரி தாய்நி னைத்தக தொர்துவாட

Koviloor Digital Library

மாவி தப்பொருள் சேக ரிப்பது
மாதர் மக்களை யாக ரிப்பது
மாரன் விற்கணை யால லைப்புறு சிந்தைதானுங்

காத லுற்றுற வேக லத்தலை
யேநி னைப்பது மோது மிச்செயல்
கான லுற்றது மேக ளிப்பது கண்டுவாழுங்

கால மிப்படி யேக ழித்திடி
ஞானு மெப்படி யோயு னைத்துதி
கான நிற்பதை யாவெ னக்கருள் கந்தவேளே

வேத னைப்பொரு ளோதெ னத்தெரி
யாதெ னக்கென வேயொர் குட்டொடு
மேவெ னச்சிறை மீத டைத்திரு வென்றகோவே

வேட முற்றொரு காவி னிற்றினை
காவ லுற்றதொர் மாகு றத்தியை
மேவி நற்கவி யாண முற்றும ணைந்தவேலா

வோத முற்றந டாக மிக்குற
வான கத்துறு சோலை நத்தம
யூர வெற்புச மீப முற்றுள கண்டனூரென்

றோத லுற்றதொர் மாத லத்தினின்
மேவி யுற்றுநல் வாழ்வ துற்றவெ
னோர்கு கப்பெரு மானெ னப்புகழ் தம்பிரானே.

முற்றுப்பெற்றது.



Koviloor Digital Library

Koviloor Digital Library